மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வீடுகளை ஒதுக்குவது பற்றி தனிக் கேள்வி போட்டால் விவரம் தரலாம். இப்பொழுது பணியாளர்கள் நிலைமை குறித்து ஆராய தனிக் குழு போடத் தேவையில்லை. அந்தந்த ஊராட்சி மன்றங்களுக்கே நிலைமைக் கேற்ப அந்தந்த ஊராட்சி மன்ற ஊழியர்கள் நலன் சம்பந்தப் பட்ட பொறுப்பையும், ஊதிய உயர்வு, பணி நிலைமை குறித்த முடிவினையும் எடுக்கின்ற உரிமையும் இருக்க வேண்டும். எனவே அத்தகைய உரிமையை உள்ளாட்சி மன்றங்களுக்கு வழங்குவது தான் பொருத்தமாக இருக்கும்.

திரு. ச. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இங்கே வைக்கப்பட்டிருக்கின்ற அறிக்கையிலே ஊராட்சி எல்லை குறுகிய விஸ்தீரணத்தில் உள்ளதால் முழு நேர துப்புரவு பணியாளர்கள் தேவையிருக்காது என்று தெரிவிக்கப் பட்டிருக்கிறது. ஒரு சில மாவட்டங்களில் ஊராட்சி மன்றங்களின் எல்லைகள் குறுகிய விஸ்தீரணத்தில் இருக்கின்றன. ஆனால் பெரியார், கோவை போன்ற மாவட்டங்களில் ஒரு ஊராட்சி மன்றம் என்பது குறைந்தபட்சம் 20 ஊர்களைக் கொண்ட ஊராட்சி மன்றங்களாக இருக்கின்றன. அதற்கு நிச்சயமாக ஒரு துப்புரவாளரே போதாது என்கின்ற நிலைமை இருக்கின்ற பொழுது அரசு இதைக் கவனத்திலே கொண்டு மேற்படி ஊராட்சி துப்புரவுப் பணியாளர்களை நிரந்தரப் பணியாளர்களாக ஆக்கி, அவர்களுக்கு மற்ற அரசுப் பணியாளர்கள் எந்த விகித அடிப்படையிலே சம்பளம் பெறுகின்றார்களோ அந்த விகித அடிப்படையிலே வழங்குவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே அதற்காகத்தான் குறிப்பிட்டேன். இதையெல்லாம் அந்த ஊராட்சிகள், பேரூராட்சிகள்தான் செய்வது நல்லது. ஏனென்றால் சில ஊராட்சிகள் சிறிய எல்லைக்கு உட்பட் டிருக்கும்; சில ஊராட்சிகள் பெரிய எல்லைக்கு உட்பட்டிருக்கும். அவர்கள் எவ்வளவு நேரம் பணியாற்றுகிறார்கள் என்பனத யெல்லாம் பொறுத்து ஊதியம் நிர்ணயம் செய்வது, தங்களுடைய நிதி நிலைமைக்கேற்ப நிர்ணயம் செய்வது என்பவை போன்ற வற்றையெல்லாம் அவர்களே மேற்கொள்ளுகின்ற வகையிலே அரசு உத்தரவு வழங்கும்.

(இ) திருமங்கலம் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளிக்குக் கட்டிட வசதியின்மை

திரு. என்.எஸ். வி. சித்தன் : மாண்புமிக்க பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ''திருமங்கலம் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு கட்டிடம் இல்லாமல் மாணவ மாணவியர்களுக்கு மரத்தடியில் பாடம் கற்பிக்கப்படுவதால் அப்பகுதி மக்களிடையே ஏற்பட்டுள்ள நிலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி மற்றும் சட்ட அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

1987 ஏப்ரல் 2]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை

கட்டிடப் பற்றாக்குறை, பரவலாக தமிழகத்தில் உள்ள பல பள்ளிக் கூடங்களிலும் உள்ளது. இக்கட்டிடங்களைப் பழுது பார்ப்பதற்கும், புதிய கட்டிடங்கள் கட்டுவதற்கும் அரசு இவ்வாண்டு [1986-87] சுமார் ரூ. 158 இலட்சம் ஒதுக்கி செலவு செய்து வருகிறது. இது தவிர, முன்னாள் மாவட்ட கழக பள்ளிகளை பராமரிக்க ஏற்கனவே ரூ. 1 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது வரும் நிதியாண்டில் இப்பள்ளியின் தேவையை ஓர் அளவுக்கு பூர்த்திசெய்ய நிதிநிலையைப் பொறுத்து நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிக்க பேரவைத்துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிக்க அமைச்சரவர்கள் அவைக்குக் கொடுத்திருக்கின்ற இந்த விவர அறிக்கையின் இறுதியிலே, ''வரும் நிதியாண்டில் இப்பள்ளியின் தேவையை ஓர் அளவுக்கு பூர்த்தி செய்ய நிதி நிலை பொறுத்து நடவடிக்கை எடுக்கப்படும்'' என்று சொல்லியிருக்கிறார்கள். உங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்வது, திருமங்கலத்திலே இருக்கின்ற இந்த உயர்நிலைப்பள்ளி, தொகுதியின் தலைமையிடமாக மட்டுமல்லாது, தாலுக்காவின் தலைநகரம், பொருளாதாரத்தில் மிக பின்தங்கிய பகுதியாக இருக்கின்ற காரணத்தினாலே, போதிய நிதி வசதி இல்லாமல், கட்டிடங்கள் இல்லாமல் மாணவர்கள் அவதிப்படுகின்ற காரணத்தினாலே உங்கள் மூலமாக மாண்புமிகு நிதியமைச்சரவர்களையும், கல்வியமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்வது, இந்த ஆண்டிலே ஒரு கட்டிடமாவது, இரண்டு வகுப்புகள் நடக்கின்ற அளவிற்குக் கட்டுவதற்கு முயற்சி எடுத்துக் கொள்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஏற்கனவே விவர அறிக்கையில் கூறியுள்ளவாறு இதுபோன்ற பழுதுபட்ட நிலையில் பல கட்டிடங்கள் இருக்கின்றன, அவற்றையெல்லாம் சரி செய்வதற்கு நூற்றுக்கணக்கான கோடி ரூபாய் நிதி தேவைப்படுகிறது. இதனால்தான் நிதிப்பற்றாக்குறை ஒரு பிரச்சினை என்று சொல்லப்பட்டது. அந்தக் குறிப்பிட்ட பள்ளியினுடைய தேவை என்ன என்பதனை பள்ளிக் கல்வி இயக்குநர் மூலமாக ஆய்ந்து அந்த அறிக்கையைப் பெற்று அதற்கேற்ப பரிசீலித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிக்க அமைச்சரவர்கள் கொடுத்திருக்கின்ற இந்த விவர அறிக்கையிலே புதிய கட்டிடங்கள் கட்டுவதற்கு அரசு 1986-87 ஆம் ஆண்டு சுமார் 158 இலட்சம்

ஒதுக்கி செலவு செய்து வருகிறது. இது தவிர முன்னாள்மாவட்ட கழக பள்ளிகளை பராமரிக்க ஏற்கனவே ரூ. 1 கோடி ஒதுக்கப் பட்டுள்ளது என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, மொத்தம் இரண்டரை கோடி ரூபாய் என்பது மிகக் குறைவாக இருக் கிறது, தமிழகத்திலே இருக்கின்ற பள்ளிகளை ஒட்டு மொத்தமாக எடுத்துக்கொண்டால் இரண்டரை கோடி ரூபாய் என்பது, யானைப் பசிக்கு சோளப்பொறி என்பதைப்போலத்தான் இருக் கிறது ஆகையினாலே, அருள்கூர்ந்து இந்த நிதியைக் கொஞ்சம் அதிகமாக்கி, பரவலாகத் தேவை உள்ள இடங்களில் கட்டிடம் கட்டுவதற்கு மாண்புமிகு அமைச்சரவர்களும், நிதியமைச்சர வர்களும் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இன்றியமையாத் தேவையின் அடிப்படையில், எவையெவை இன்றியமையாத் தேவையோ அவைகளுக்கு முன்னுரிமை தந்து நிதி ஒதுக்கப்படுகிறது. அப்படி இன்றியமையாத் தேவைகள் பல இருக்கின்றபொழுது கட்டிடங்கள் பின்தள்ளப்படுவது இயற்கை. அந்த அடிப்படை யில்தான் இந்த அளவிற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

(ஈ) அரசு விலையில் பள்ளிப் புத்தகங்கள் கிடைக்காதது

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திருவாளர்கள் எஸ். இராசாராமன், சு. சிவராஜ், டாக்டர் க. நல்லமுத்து ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு கல்வி மற்றும் சட்ட அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

டாக்டர் க. நல்லமுத்து: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ''பள்ளிப் பாடப்புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள் அரசு நிர்ணயித்த விலையில் பள்ளிகளிலும், கடை களிலும் கிடைக்காத நிலையில் அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுவது குறித்த'' அவசரப்பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி மற்றும் சட்ட அமைச் சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

பள்ளிப் பாடப்புத்தகங்களும், நோட்டுப் புத்தகங்களும் மாணவ மாணவியருக்கு நிர்ணயித்த விலையில் கிடைக்கச் செய்வது பற்றிய நிலைமை பின்வருமாறு:—

பள்ளிப் பாடப் புத்தகங்கள்

2. தமிழ் நாட்டில் அனைத்துப் பள்ளிகளுக்கும் பாடப் புத்தகங்களை தமிழ்நாடு பாடநூல் நிறுவனம் அச்சிட்டு வெளி யிட்டு வருகிறது. 1—8 வகுப்புகளில் பயின்று சத்துணவுத் திட்டத்தில் பயனடையும் மாணவ மாணவியர்களுக்கு இலவச